ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2024.01.16 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2023 திசெம்பர்

## தயாரிப்பு மற்றும் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் இரண்டும் 2023 திசெம்பரில் அதிகரித்தன

**தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 திசெம்பரில் 52.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் விரிவடைதலினை எடுத்துக்காட்டியது.** தொழில்நிலை தவிர அனைத்து துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இம்மேம்படுத்தலுக்குக் காரணமாக அமைந்தன.

பருவகால கேள்வி காரணமாக உணவு மற்றும் குடிபானத் துறையின் தயாரிப்பு மூலம் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் அதிகரிப்புக்கள் தூண்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், புடவைகள் மற்றும் ஆடைகள் துறையின் தயாரிப்பில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பன மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன, தொழில்நிலையிலும் வீழ்ச்சி ஏற்படுவதற்கு இது பிரதானமாகப் பங்களித்தது. அதேவேளை, உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகள் என்பவற்றில் அதிகரிப்பின் காரணமாக கொள்வனவுகளின் இருப்பு மாதகாலப்பகுதியில் அதிகரித்தது. மேலும், நிரம்பலர் விநியோக நேரம் திசெம்பரில் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.0** | **52.7** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் |
| புதிய கட்டளைகள் | 60.5 | 56.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 59.5 | 53.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.5 | 42.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 59.5 | 59.5 | = | அதிகரிக்கின்றது, அதே மட்டத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.5 | 54.5 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்படுகின்றன. எனினும், 2024 சனவரி தொடக்கம் வரித் திருத்தங்களின் தாக்கம் மற்றும் செங்கடலில் அமைதியின்மை காரணமாக கப்பலேற்றுதல் இடையூறுகள் என்பன பற்றி நிறுவனங்கள் கவலையடைந்துள்ளன.

தயாரிப்பு கொ.மு.சு **52.7**

2023 திசெம்பர்

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் நவெம்பரிலிருந்து 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2023 திசெம்பரில் 49.0 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 திசெம்பரில் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் இச்சுட்டெண் மெதுவான வேகத்தில் மேம்பட்டது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 சனவரி 16 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 திசெம்பரில் 58.9 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இதற்கு முன்னிலை வகித்திருந்தன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் பணிகள், காப்புறுதி, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தங்குமிடம், உணவு, குடிபானம் ஆகிய துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் அதிகரித்தன.

பல்வேறு துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட சாதகமான அபிவிருத்திகளுக்கிசைவாக தொழில் நடவடிக்கைகள் 2023 திசெம்பரில் உயர்வான வேகத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தன. அதற்கமைய, பண்டிகை மற்றும் விடுமுறை பருவகாலங்கள் அத்துடன் சுற்றுலாப் பயணி வருகைகள் அதன் உச்சத்தை எட்டியமை என்பவற்றுக்கு மத்தியில் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள், போக்குவரத்து மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறைகளும் பருவகால விற்பனைகளின் காரணமாக வலுவான வளர்ச்சியொன்றினைக் காண்பித்தன. அதேவேளை, கடன்வழங்கல் நடவடிக்கைகளில் அதிகரிப்பிற்கிசைவாக நிதியியல் பணிகளும் மேலும் மேம்பட்டன.

பருவகாலக் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சில புதிய ஆட்சேர்ப்புகளுக்கு மத்தியில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்த அதேவேளை நிலுவையிலுள்ள பணிகள் திசெம்பர் காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **59.4** | **58.9** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | கொ.மு.சு துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 57.6 | 64.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 63.6 | 71.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 58.5 | 46.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 45.6 | 48.3 | + | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 71.7 | 64.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெறுமதிசேர் வரித் திருத்தங்களின் பாதகமான தாக்கங்கள் அத்துடன் தொடர்புடைய எரிபொருள் மற்றும் உபயோகச் சேவைச் செலவுகளில் அதிகரிப்புக்கள் என்பன பற்றி கரிசனைகளுக்கு மத்தியில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் திசெம்பரில் மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்தன.

**பணிகள்**
**கொ.மு.சு 58.9**
2023 திசெம்பர்

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 திசெம்பரில் 51.6 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 திசெம்பரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்¹, 2024 சனவரி 16 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள்
மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.